விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாவட்ட விளையாட்டு அரங்கங்களில் வார இறுதிப் பயிற்சி முகாம்கள் நடத்த நிதி ஒப்பளிப்பு வழங்கி, அரசாணை 4-1-2012-ல் வெளியிடப்பட்டுள்ளது.

96—

ஓய்வூதியம்

வினா எண் 9215—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை 3,000 ரூபாயாக உயர்த்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) நலிந்த நிலையிலுள்ள முன்னாள் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை ரூ.1,000/-லிருந்து ரூ.3,000/- ஆக உயர்த்தி, ஆணை 21-12-2011-ல் வெளியிடப்பட்டுள்ளது.

97—

தடகளப் போட்டி

வினா எண் 9216—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) மாற்றுத் திறனாளிகளுக்கு மாநில அளவில் தடகளப் போட்டிகள் நடத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2012 மே 11]

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) மாற்றுத் திறனாளிகளுக்கு, வருடம்தோறும், அந்தந்த மாவட்டங்களில் மாவட்ட அளவிலான போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் நடத்தப்பட்டு வருகின்றன. மாவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

98—

உடற்பயிற்சிக் கூடம்

வினா எண் 11963—திரு. கு. ரவி: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) அரக்கோணம் தொகுதி, அரக்கோணம் ஒன்றியம், மூதூர் கிராமத்தில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி, பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) உடற்பயிற்சிக் கூடம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

99—

சட்டமன்றப் பேரவை

வினா எண் 11388—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்தி மக்கள் தொடர்புத் துறை தலைமையிடம் மற்றும் அலுவலகங்களில் ரூ.8.00 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்கும் செயற்குறிப்பின் நிலையைத் தெரிவிக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையிலுள்ள தலைமையிடம் மற்றும் மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் ரூ.8.00 இலட்சம் செலவில் கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்க 27-10-2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. திரு. சன் இன்போடெக், சென்னை-24 என்ற நிறுவனத்திடமிருந்து Directorate General of Supplies and Disposal, New Delhi *அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட விலை மதிப்பீட்டின் அடிப்படையில் 20 கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் வாங்க கொள்முதல் ஆணை* (Purchase Order) *24-1-2012 அன்று வழங்கப்பட்டு, கணினிகள் மற்றும் உபகரணங்கள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.*

100—

புகைப்படக் கருவிகள்

வினா எண் 11391—திரு. ரா. சரத்குமார்: *மாண்புமிகு செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை தலைமையகத்திற்கும், மாவட்டங்களுக்கும் 9 கெனான் டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் வாங்கும் செயற்குறிப்பின் நிலை குறித்துத் தெரிவிக்க அரசு முன் வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, செய்தி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்:

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை தலைமையகத்திற்கும், மாவட்டங்களுக்கும் 9 கெனான் டிஜிட்டல் புகைப்படக் கருவிகள் வாங்க, 27-10-2011 அன்று அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி, 9 கெனான் டிஜிட்டல் கருவிகள் வாங்குவதற்கான கொள்முதல் ஆணை, 21-2-2012 அன்று வழங்கப்பட்டுள்ளது. புகைப்படக் கருவிகள் எதிர்பார்க்கப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

2012 மே 11]

(பட்டியல் 4)

1—

மரப்பாலம்

வினா எண் 125—திரு. எம்.கே. முத்துகருப்பண்ணசாமி: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

பொள்ளாச்சி மரப்பாலம் பள்ளத்தில் வசிக்கும் பொது மக்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், வருவாய்த் துறை அமைச்சர்:

பொள்ளாச்சி வட்டம் மற்றும் நகரம் மரப்பேட்டை பள்ளம் என்று அழைக்கப்படும் டவுன் சர்வே வார்டு A, பிளாக் 16, டவுன் சர்வே எண் 782/2, ஓடைப்புறம்போக்கில் 782/3,4,5,6 என உட்பிரிவு செய்யப்பட்டு வீட்டுமனைப் பட்டா இல்லாமல் (சுடுகாட்டுப்பள்ளம் பகுதி) சுமார் 100 குடும்பங்கள் வசித்து வருகின்றன. மேற்படி நபர்களுக்கு மாற்று இடம் வழங்க தகுதியான இடம் பொள்ளாச்சி நகரப் பகுதியில் நத்தம் புறம்போக்கில் இல்லை. மேற்படி பகுதியில் வசிப்பவர்கள் தொண்டாமுத்தூர் செல்ல சம்மதம் தெரிவித்தால், பொள்ளாச்சி வட்டம், தொண்டாமுத்தூர் கிராமம், வீட்டுமனைக்காக நில எடுப்பு செய்யப்பட்ட புல எண்கள் 252/6C, 255/1B, 129A/2A1, 129B1A(b), 130/1A1 ஆகியவற்றில் உள்ள காலியிடங்களில் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

நிலம் வழங்குதல்

வினா எண் 6054—திரு. எஸ். செந்தில்குமார்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) திருவெறும்பூர் தொகுதிக்குட்பட்ட நவல்பட்டு ஊராட்சியில் பர்மா அகதிகளுக்கு ஒதுக்கப்பட்ட சர்வே எண் 310/1-ல் 68 ஏக்கர் நிலம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?